ஸ்ரீ ஜிநாய நம:

# சாஸந தேவதைகள் வழிபாடு



ஸ்ரீ பத்மாவதி அம்மாள்

Publie Sher

*Akhila Bharata Digambar*
*Jain Maha Saba*
*Branch (Madras)*

ஸ்ரீ ஜிநாய நம:

# சாஸந தேவதைகள் வழிபாடு


எழுதியவர்

பூஜ்ய கணிநி சித்தாந்த விசாரத்

ஸ்ரீ 105 விஜயமதி மாதாஜீ

அவர்கள்

தமிழாக்கம்

மல்லிநாத் ஜெயின் சாஸ்திரி

சென்னை



வெளியிடுவோர் :-

அகிலபாரத் திகம்பர ஜைன மகாசபை கிளை

சென்னை

விலை 0-25

ஸ்ரீஜிநாய நம:

# சாஸந தேவதைகள் வழிபாடு

## முன்னுரை

நம் ஜைன சமய முறைப்படி இருபத்தி நான்கு தீர்த்தங்கரர்களுக்கும் இருபத்தி நான்கு யக்ஷர்கள், இருபத்தி நான்கு யக்ஷிகள் அமைக்கப்பட்டுள்ளன. தீர்த்தங்கரர்களுக்குச் செய்யும் வழி பாட்டு முறைகள் தனியாக உள்ளன. அதே போன்று யக்ஷயக்ஷிகளான சாஸநதேவதைகளின் வழி பாட்டு முறைகளும் வேறு பட்டதாக உள்ளன. இவ்விரு வழிபாட்டு முறைகளும் இமாலயம் முதல் கன்னியாகுமாரி வரை பரவி இருந்தன என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன.

**சாஸநதேவதைகளின் வழிபாடு :** சாஸந தேவதைகள் நற்காட்சியாளர்களே என்பதை நூலில் மேற் கோள்களுடன் நன்கு விளக்கப்பட்டுள்ளதைக் காணலாம். ஏனெனில் ஸமவ சரணத்தினுள் செல்லும் தீக்காட்சியாளர்களும் தீர்த்தங்கரர்களின் புண்ய மகிமையால் மானஸ்தம்பத்தைக் கண்டதுமே நற்காட்சியாளர்களாக மாறி விடுகின்றனர். இதற்கு எடுத்துக் காட்டு கௌதம பிராமணரேசாலும், அஃதே போன்று சாஸந தேவதைகள் ஸமவசரணத்தில் தீர்த்தங்கரர்களுக்குத் தொண்டு செய்பவர்களாகையால் முன்னர் நற்காட்சியாளர்களாக இல்லரதிருந்தாலும் ஸமவ சரணத்திற்குள் சென்ற பின்னர் நற்காட்சியாளர்களாக மாறி விடுகின்றனர் என்பதும், நற்காட்சியாளர்களே ஜிநபகவானுக்குத் தொண்டு செய்கின்றனர் என்பதும், ஏனையோர் (நற்காட்சி அல்லாதார்) ஸமவசரணத்திற்குள் செல்வதுமில்லை; ஜிநபகவானுக்குத் தொண்டு செய்வது

மில்லை என்பதும் அறியத் தக்கது. இதற்கு முக்கிய காரணம் ஸமவசரணத்தின் முன் வாயிலில் அமைந்துள்ள மானஸ்தம் பத்தைக் கண்டதும் மானசஷாயம் அகன்று விடுகின்றது. நற்காட்சி தோன்றி விடுகின்றது. மனிதர்கள், நால்வகை தேவர்கள், விலங்கினங்கள் ஆகிய அனைவருக்கும் இது பொருந்தும் இக் கருத்தை "பாஷாணாத்மா, ததி தரஸம, கேவலம் ரத்ன மூர்த்திர், மானஸ்தம்போ பவதிச பரஸ்தாத்ருசோ ரத்னவர்க:" என்ற வாதி ராஜ முனிவரின் கருத்துடன் நோக்கத் தக்கது. அதாவது:- ஸமவ சரணத்திலுள்ள மானஸ்தம்பங்கள் இரத்தினக் கற்களால் அமைக்கப் பட்டிருந்த போதிலும் ஜிநபகவானுடைய தொடர்பு கிடைத்தமையாலேயே மானசஷாயத்தைப் (அகம் பாவத்தை) போக்கும் தகுதி அதற்குக் கிடைத்துள்ளது என்பதை ஆசாரியார் அழகு படக் கூறியுள்ளார். எனவே சாஸந தேவதைகள் நற்காட்சியாளர்கள் என்பதில் எவ்வித ஐயப்பாடும் கொள்ளத் தேவை இல்லை.

சாஸந தேவதைகளை வழிபடுவது ஏன்? சாஸந தேவதைகள் ஜிநபக்தர்கள், அவர்களைப் பின் பற்றுவதால் அவர்கள் நம்மை நம் பாதையில் செம்மையுற அழைப்பு விடுகின்றனர் அவர்கள் சக்தி வாய்ந்தவர்கள், ஜிநபக்தர்களுக்கு வரும் துன்பத்தைத் துடைக்கும் வல்லமையுள்ளவர்கள். அதைப் பற்றிய சான்றுகள் நூலில் பல விளக்கிக் கூறப் பட்டுள்ளன. அவை நோக்கத் தக்கவை. குடும்ப வாழ்க்கையிலுள்ள மக்கள் இன்ப துன்பங்களுக்கு ஆளாகின்றனர். இன்ப காலத்தில் மக்களுக்கு எவருடைய உதவியும் தேவை யில்லை; தேடுவதுமில்லை. துன்ப காலத்தில் பிறருடைய உதவியை நாடுவது மக்களின் இயல்பாகும். நம்மை ஒருவர் தாக்க வந்தாலோ, தாக்கினாலோ அப்பொழுது உதவிக்கு மற்றவரையும், காவலரையும், அரசையும், நீதி மன்றத்தையும் நாடுவதைக் காண்கிறோம். மக்களுடைய சக்திக்கு அப்பாற்பட்ட செயல் உண்டாகும் போது தெய்வம் என்ற பெயரால் க்தி (வல்லமை) வடிவிலுள்ளவர்களை நாடு வதும்

இயல்பாக நடைபெறுகின்ற செயலாகும். இன்றும் மக்கள் ஆசையின் காரணமாகவும், துன்பத்தின் காரணமாகவும் வழிபடத்தகாத தீக்காட்சித் தெய்வங்களை வணங்குவதைக் கண்டு வருந்தாமலிருக்க முடியவில்லை. இன்று எத்தனையோ மக்களிடையே (ஜைன சமூகத்தவர்) கருமாரியம்மன், மருவத்தூர் ஆதி பராசக்தி ஆகிய தெய்வங்களை வணங்குவதும், திருப்பதி திருத்தணி சென்று முடி கொடுப்பதும், சபரிமலை ஐயப்பசாமியை வழிபட சிவப்பு உடை அணிந்து விரதமிருந்து செல்வதும் (நம் சமூகத்தவரிடையேயும்) காணக் கிடைக்கின்றது அத்தகைய தீக்காட்சி வழி பாட்டை மாற்றவே நம் முன்னோர்கள் திருநறுங்குன்றம், ஆர்பாக்கம் போன்ற வழிபாட்டு ஸ்தலங்களில் முடி கொடுக்கவும் இன்னோர்கள் நற்காட்சி விரதமிருந்து திருநறுங்குன்றம் சென்று விரதம் முடிக்கவும் வழி வகுத்தது சாலச் சிறந்த தென்பதை யாராலும் மறுக்க இயலாது. இதனால் தீக் காட்சி நீங்கவும், நற்காட்சி தூய்மை பெறவும், ஜிநபகவானைப் பணியவும், ஸ்தலத்திற்கு ஆதரவும் வருமானமும் கிடைக்கவும் வழி பிறக்கின்றது. எனவே இவையனைத்தும் தீக்காட்சிப் பாதையிலிருந்து விலக்கவும், நற்காட்சி பாதைக்கு அழைப்பு விடுக்கவும் ஏற்பட்டுள்ளது என்பதை ஜிநவறத்தில் பற்றுள்ள அனைவரும் மறுக்காமல் ஏற்பர் என்பதில் எவ்வித ஐயமும் கொள்வதற்கில்லை. எனவே இச் செயல் சாலச் சிறந்ததேயாம்.

நற்காட்சியாளர்கள் சாஸந தேவதைகளை வழி படலாமா? அதனால் நற்காட்சிக்கு மாசு ஏற்படுமா?

நற்காட்சியாளர்கள் தீக்காட்சியாளர்களை வழி படலாகாது என்பது அறவோர்களின் அறவுரையாகும், மாபெரும் ஆசாரியரான சமந்த பத்திரரின் கருத்தை இந் நூலில் காணலாம். துறவறப் பெருமான்களான குந்த குந்தர், சமந்த பத்திரர் அகளங்க தேவர் போன்றோர்களும், நற்குல திலகர்களான பற்பல சிராவக சிராவகிகளும்

சாஸந தேவதைகளின் உதவியை நாடி இருப்பது நூலில் காணத் தக்கது. நற்காட்சியாளர்களின் வேண்டுகோளுக் கிணங்கி, நற்காட்சியாளர்களான சாஸந தேவதைகள் உதவியளித்தால் அதற்கு நன்றி செலுத்தாமலிருத்தல் நல்லோர்களின் நற்செயலாகக் கருத இயலாது. அக் கருத்தை நம் அற நூலார் கூறுவதாவது:—

என் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய் நன்றிகொன்ற மகர்க்கு திருக்குறள்—

எனவே அற நூல்களின் கருத்துப் படியும் நன்றி செலுத்தி கௌரவிப்பது இன்றியமையாததாகும். அதனால் நற்காட்சிக்கு எவ்வித மாசும் ஏற்படுவதற்கில்லை என்பது அறியத் தக்கது.

## சாஸந தேவதைகளின் வழிபாடு எப்பொழுது தோன்றியது?

சாஸந தேவதைகளின் வழிபாடு பன்னெடுங்காலமாக இருந்து வந்திருக்கிறது. மதுரை மாவட்டம் கழுகு மலை சிற்பங்கள் சுமார் ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற் பட்டவை என்பதாக ஆராய்ச்சிவல்லுநர்கள் கூறுகின்றனர் அத்தகைய பழமை வாய்ந்த சிற்பங்களுள் சுமார் 6 அடி உயரமுள்ள தர்மதேவி சிற்பமும் கம்பீரமாகக் காட்சியளிக் கிறது. பம்பாய் ம்யூசியத் (கண் காட்சி சாலை) தில் தர்ம தேவி சிலை காணக்கிடைக்கிறது. அது இரண்டாம் நூற்றாண் டைச் சார்ந்ததாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேல் சித்தாமூர் மலையனூர் கோயிலிலுள்ள சிற்பங்கள் பழமை வாய்ந்தவை. அவைகளுள் தர்மதேவி சிற்பமும் காட்சி யளிப்பது காணத் தக்கது. பண்டை வரலாற்று சிறப்பு வாய்ந்த திருமலை, திருநறுங்குன்றம் ஆகிய இடங்களிலும் சாஸந தேவதைகள் வழிபாடு நடந்து வந்தது குறிப்பிடத் தக்கது. மத்தியப் பிரதேசத்திலுள்ள ஜபல்பூரின் நடுவில் அமைந்துள்ள பெரிய குளக் கரையில் 'ஹனுமான் தால்'

என்ற நம் திகம்பர ஜைன கோயில் உள்ளது. அதில் பண்டைய கால சிலை வைக்கப்பட்டுள்ளது. அச்சிலை கலை நிறைந்ததாகும். அதில் யக்ஷ யக்ஷிகள் அமைந்திருப்பது வடக்கிலும் இவ்வழிபாடு இருந்து வந்துள்ளது என்பது அறியக் கிடைக்கின்றது. காசியிலுள்ள போல்பூர் கோயிலிலும், டில்லி மாநகரிலுள்ள செங்கோட்டைக் கோயிலிலும் பத்மாவதி அம்மன் வழிபாடு இன்றும் சிறப்பாக நடைபெறுகின்றது. காஞ்சி-காமாட்சி, மதுரை மீனாட்சி, காசி-விசாலாட்சி ஆகிய மூன்று இடங்களிலும் வீற்றிருக்கும் தேவி சிலைகள் நம் தர்ம தேவி சிலைகள் என்றும், பிற்காலத்தில் மதகாழ்ப்பின் காரணமாக ஆலயங்கள் மாற்றப்பட்ட போது, என்ன நிகழுமோ என்ற பயத்தின் காரணமாக சிலைகளை (தர்மதேவி) மாற்றாமல் பெயர் மாற்றம் மட்டும் செய்யப்பட்டது என்பதை நம் சமய அறிஞர்கள் பலத் அறிவர். எனவே இவ் ஆதாரங்களைக் கொண்டு நோக்குங்கால் சாஸந தேவதைகள் வழிபாடு பன்னெடுங் காலத்திற்கு முன்பிருந்தே நடைபெற்று வருகின்றது என்பது உறுதியாக ஏற்கத் தக்கது.

### சாஸந தேவதைகளுள் வழிபடுபவர்கள் எவர்?

சாஸந தேவதைகள் இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களுக்கும் இருபத்து நான்கு யக்ஷ யக்ஷிகள் உள்ளனர், என்பது முன்பே குறிக்கப்பட்டுள்ளது. ஆண் தேவர்களில் 'பிரம்ம தேவரும்' பெண் தேவதைகளில் ஜ்வாலா மாலினி, தர்மதேவி (கூஷ்மாண்டி,) பத்மாவதி ஆகிய மூன்று தேவிமார்களும் வணங்கப்படுகின்றனர். ஏனைய தேவர்கள், தேவியர்களின் வழிபாடு பொது மக்களிடையே காணப்படவில்லை. இதற்குக் காரணமும் அறிய இயலாத ஒன்றாகும்.

### சாஸந தேவதைகளிடம் எதிர் பார்த்தல் :—

நம் தீர்த்தங்கரர்கள் முக்தி உலகை எய்தியவர்கள். விருப்பு-வெறுப்பு அற்றவர்கள். வேண்டுதல்—வேண்டாமை

இல்லாதவர்கள். அத்தகைய பற்றற்ற நிலையை அடை வதற்கே அத் தூயோரை வழிபடுவதாகும். ஆனால் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள நாம் அத் தூயோர்களின் நிலைக்கு வெகு தொலைவில் இருக்கிறோம். நாம் பற்றும்-பாசமும் உடையவர்கள் நம்மவர்களுக்கு அத்தகைய தூய நிலையை அடைவதற்கான பக்குவ நிலை ஏற்படவில்லை. நன்மைத்-தீமைக்கும், விருப்பு-வெறுப்பிற்கும் அடிமை களாகிய நமக்குப் பற்று கோல் தேவைப்படுகிறது. நமக்குத் துன்பம் வரும் போது அதைத் துடைக்க சக்தி வாய்ந்த உதவியை நாடுகிறோம். அச்சமயம் ஜைன சமயத்தைச் சார்ந்த உதவி கிடைக்காவிடில் பிற சமய தெய்வங்களையும் வழிபடத் தயாராகி விடுகிறோம். ஆசையிலும் துன்பத்தி லும் மக்களுக்கு அறிவு-செயல் படுவதில்லை. நல்லது-கெட்டது, ஏற்கத் தக்கது-தகாதது என்ற பாகு பாட்டை இழந்து, யார் எதைச் சொன்னாலும் நம்பவும், செயல் படவும் தயாராகி விடுகிறோம். அப்பொழுது நாம் நற் காட்சியிலிருந்து நழுவுவதோடு ஜைன சமயக் கொள்கை களிலிருந்தும் நழுவி விடுகிறோம் எனவே அங்ஙனம் நழுவிச் செல்லாமலிருக்கவும், ஜைன பாரம் பரியத்தைக் கட்டிக் காக்கவும் இச் சாஸந தேவதைகள் வழிபாடு தேவை எனில் மிகையாகா.

**ஜிநருக்கும் சாஸந தேவதைகளுக்கும் உள்ள வழிபாட்டு முறையில் காணும் வேற்றுமை :**

பற்றற்ற பரம தேவர்களாகிய ஜிநேச்வரர்களை வணங்கு வது பற்றையும்-பாசத்தையும் அறுக்கவேயாகும். அவர்களை சாக்ஷியாக (வழி காட்டியாக) வைத்து, நாமும் அத்தகைய நிலையை அடைய முயலுகிறோம். அந்நிலை, குடும்ப வாழ்க் கையில் பற்றற்றவர்களுக்கும், துறவறத்தை மேற் கொண்ட வர்களுக்கும் பொருந்தும். அத்துறவற நிலையிலும் மேல் நிலைக்குச் சென்றவர்கள் (ஆறாம் குண ஸ்தானத்திற்கு மேற் பட்டவர்கள்) எந்த தெய்வத்தையும் (அரஹந்தர் முதலா னோரையும்) வணங்க மாட்டார்கள்! தன் தூய ஆன்ம

சிந்தனையிலேயே நிலைத்திருப்பார்கள். ஆன்மாவின் ஒரே நிலையில் நிலைத்து விடும் போது அதனினும்-வேறுபட்ட சிந்தனை எங்ஙனம் இருக்க இயலும்! ஆனால் நாம் அத்தகைய நிலையிலில்லை. மிக-மிகக் கீழ் நிலையிலிருக்கிறோம். படிப்படியாக மேலே ஏற முயலுகிறோம். நாம் கடக்க வேண்டியது எண்ணற்ற படிகளாகும். முதற் படியிலுள்ள நாம் ஜிநபக வானை வழிபடும் போது பிறவியை ஒழிக்க ஜலமும், சம்ஸார தாபத்தைப் போக்க கந்தமும் (சந்தனம்), அழியாப் பதவியைப் பெற அக்ஷதை (அரிசி)யும், காமனை (ஆசையை) விரட்ட மலரையும், பசியைப் போக்க சரு (உணவுப் பொருள்) வையும், அஞ்ஞானத்தை அகற்ற தீபத்தையும், எண்வகை வினைகளைப் பொடிப் பொடியாக்கி வெளியேற்ற தூபத்தையும், மோக்ஷ பலனைப் பெற ஃபலத்தை (பழம்)யும் அற்பணிக்கிறோம். இவை அனைத்தும் குடும்ப பாசத்தை வேரறுத்து, அழியாவரம் பெறவே செய்யும் ஒப்பற்ற நற்செயலாகும்.

ஆனால் நாமோ மக்கள் பாசத்தில் ஆழ்ந்தி கிடக்கிறோம். பாச மற்றவர்கள் போல் காண்பவர்களும் நடிப்பவர் களாகவே தோற்றமளிக்கின்றனர். உண்மையில் ஆசா பாசத்தையும், கோபதாபத்தையும் போக்குவது எளிதன்று. அதற்கு முன் எத்தனையோ நற்செயல்களைச் செயல் படுத்த வேண்டி இருக்கிறது. அத்தகைய நிலையில் பாசத்தைக் கொண்டவர்களாகிய நமக்கு உதவும் தேவதைகளுக்கு நாம் அளிக்கும் பொருள்களாவன:- அர்க்யம், ஜலம், கந்தம், அக்ஷதம், புஷ்பம், தீபம், தூபம், நைவேத்யம், பலம் (பழம்) வஸ்திரம், ஆபரணம் தாம்பூலம், யக்ஞபாகம் ஆகியவை களாகும். இவைகளை அளிக்கிறேன் ஏற்றுக் கொள்ளவும் என கோரப்படுகிறது. ஆகவே இவ்வழிபாடு குடும்ப பாச முள்ளவர்கள் முதற்கட்டத்தில் நடத்தும் வழி பாடாகும், அங்கு ஜிநரிடம் தேவையை (ஆசை) ஒழிக்கவும், இங்கு தேவதைகளிடம் தேவை வேண்டியும் வழிபாடு நடத்தப் படுகிறது. உண்மையில் ஒரு சிராவகன் தேவையை

வேறாக்கச் செயல் படுவாரேல் அது சாலச் சிறந்தது என்பதைக் கூறத் தேவை இல்லை. ஆனால் நடைமுறையில் சொல் வேறு செயல் வேறு என்பதாகத்தான் காட்சியளிக்கின்றதே யொழிய, இரண்டும் ஒன்றாகக் காணக்கிடைக்க வில்லை. அந்நிலை வரும் நாள் எந்நாளோ! எனவே இரண்டு வழிபாட்டிற்கும் உள்ள வேற்றுமையை உணர்தல் சாலச் சிறந்ததாகும்.

**சாஸந தேவதைகளின் வழி பாட்டை மறுப்பவர்கள் :—**

சிலர் சாஸந தேவதைகளின் வழி பாட்டை வெறுக்கின்றனர் மற்றும் மறுக்கின்றனர் அங்ஙனம் வெறுக்கும், மறுக்கும் செயலில் ஈடுபடுபவர்கள் வியாபாரத் துறையைச் சேர்ந்தவர்களாகில் பெரும் பேராசையால் நீதியை விலைக்கு விற்றும் அரசாங்க வரியை ஏய்த்தும்; தொழிலாளர்களை வதைத்தும் கொடிய முறையில் பொருளீட்டுவதைப் பார்க்கும் போது அவர்களின் சொல்லுக்கும் செயலுக்கும் எவ்வித தொடர்பும் இருப்பதாகப் புலப்படவில்லை. ஏனைய வியவசாயம், தொழில் போன்ற துறைகளிலிருப்பவர்களும் போட்டி, பொறாமை, ஒருவர் மற்றொரு வரைத் தாழ்த்துதல் மற்றவரை அழுத்தித் தான் மேல் வர முயலுதல், நேர்மை யற்று பொருளீட்டுதல், தற்பெருமை, தன்மானம், இன்னா செய்தல், நன்றி மறத்தல் போன்ற தீச்செயல்களில் ஈடுபட்டிருப்பதைக் காண்கிறோம். அனைத்தும் நற்காட்சிக்கு இவைகள் எதிர் மாறானவையே என்பதில் ஐயமில்லை, அத்தகையோரின் கூற்றுக்குப் பொருள் கொள்வது வீணேயாம்.

ஒரு சிலரின் கூற்றாவது:- வினைப்படி அனைத்தும் நடக்கும். வழி பாட்டால் ஆவது யாதுமில்லை என்கின்றனர். அத்தகையோரும் ஜோதிடனைத் தேடி அலைவது, குறி கேட்பது, நல்ல நாள் பார்ப்பது, சகுனம் பார்ப்பது, பேய் பிடித்தால் வேப்பிலை அடிக்கச் செய்வது, நோய் வந்தால் டாக்டரைத் தேடி அலைவது போன்ற செயல்களைச் செய்யத்

தயங்குவதில்லை. ஓடோடிச் செய்கின்றனர். தனக்கொன்று, பிறருக்கொன்று எனக் கூறுவது நேர்மையாகாது. தனக்கோ, தன் அருமை மகனுக்கோ, மகளுக்கோ, மனைவிக்கோ, நெருங்கிய உற்றார் உறவினர்க்கோ நோய்-நொடி, வருங்கால் பைத்தியம் பிடித்தவர்கள் போல் அலை வதும் துன்புறுவதும், கவலைக் கொள்வதும் கூற இயலாத தாகும். தெய்வத்தைப் பழிப்பவர்களாயினும் அப்பொழுது அவர்கள் வேண்டாத தெய்வமிருக்காது! போகாத இட மிருக்காது, சாஸன தேவதைகளின் வழிபாடு என்று வரும் போது மட்டும் தத்வக் கருத்துக்கள் தலை காட்டும். கருத்துச் செறிவு கொண்டவர்களால் இத்தகைய ஒவ்வாத போலிச் செயல் ஏற்க இயலாததாகும். எனவே ஒவ்வொருவரும் கூடியவரைச் சொல்லையும், செயலையும் ஒன்று படுத்தி நடை முறையில் நடக்க வேண்டியது இன்றியமையாத தாகும். இல்லையேல் உலகம் நம்மை நம்பாது; நம் சொல்லுக்குமதிப்பும் தராது.

ஆகவே நாம் கீழ்படியிலுள்ள நம் சமூகத்தாரைக் கட்டிக்காக்கவும், அவர்கள் நம் சமூகத்தை விட்டும், சமூகக் கொள்கையிலிருந்தும் நழுவிச் செல்லாமலிருக்கவும் நற்காட்சிப் பாதையில் அடி எடுத்து வைக்கவும், ஜிந பகவானிடத்திலும், அவர் கூறிய பரமாகமத்திலும் நம்பிக் கைக் கொள்ளவும், மேன் மேலும் ஆன்ம நலனுக்கு ஏற்ற நற்செயலில் ஈடுபடுமாறு தூண்டவும் கடமைப்பட்டவர் களாவோம். இல்லையேல் சிறுபான்மையாயுள்ள நம் சமூக மக்கள் பிற தீக்காட்சிப் பாதையிற் செல்வதுடன், எண்ணிக் கையிலும் குறைந்து நாளடைவில் குன்றி விடுவர் என்பது சிந்திக்கத் தக்கது.

பரமபூஜ்ய கணிநி ஸ்ரீ 105-விஜயமதி மாதாஜீ அவர்கள் ஆகம மேற்கோள்களுடன் "சாஸந தேவதைகள் வழிபாடு" என்ற இந்நூலைத் திறம்பட எழுதியுள்ளார்கள். மாதாஜீ அவர்களுக்குச் சாஸந தேவதைகளின் வழி பாட்டினுல்

அவமொன்றுமில்லை. ஆனால் பாரம் பரியத்தைக் காக்க வழி காட்டுவது தூயோர்களின் சீரியச் செயலாகும். அதையே மாதாஜீ அவர்கள் செயல் படுத்தி இருக்கிறார்கள். நூலை நன்கு ஆழ்ந்து படிப்பவர்களுக்கு மாதாஜீ அவர்களின் அறிவுத் திறனும், நூலின் சிறப்பும் சொல்லாமலே விளங்கும். எனவே கருணை வடிவங்கொண்ட மாதாஜீ அவர்களுக்கு என் நமோஸ்துவையும், நன்றியையும் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாவேன்.

இச் சிறிய நூலை வெளியிட சென்னை வாழ்வடமாவில் வணிகத் துறை திகம்பர ஜைன பெரு மக்கள் முன் வந்தனர். அவர்கள் அகில பாரத திகம்பர ஜைன மகாசபை கிளை (சென்னை)யின் வாயிலாக வெளியிட பொருளுதவி அளித்தது பாராட்டத் தக்கது. ஜைன திருவறத்தின் பால் அவர்களுக்குள்ள ஆழ்ந்த பற்று பாராட்டவும், பின் பற்றவும் தக்கது. எனவே அவர்களுக்கும் என் நன்றி யறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை நன்கு அச்சிட்டு உதவிய S. தன்யகுமார் அச்சகத்தாருக்கும் நன்றி உரித்தாகுக.

இறுதியில் தமிழக ஜைன பெரு மக்களிடம் வேண்டிக் கொள்வதாவது:- இந்நூலைக் கவனத்துடன் நன்கு படித்து, சிறந்த கருத்தையுணர்ந்து, சாஸந தேவதைகளை வழிபடுவதோடு, ஜிநபகவான் மீது அசைக்க முடியாத நம்பிக்கையைக் கொள்ளவும், நற்காட்சியைப் பெறவும், திருவறத்தை வளர்க்கவும், சமூகத்தைக் கட்டிக்காக்கவும் முயலுவீர்களாக! வாழ்க ஜிநவறம்! வளர்க சாஸநதேவதை வழிபாடு!!!

இங்ஙனம்,

**மல்லிநாத் ஜெயின் சாஸ்திரி,**

சென்னை.

ஸ்ரீ ஜிநாய நம :

# சாஸந தேவதைகள் வழிபாடு

ஸம்ஸாரம் அநாதியாகும், தர்மமும் அநாதியாகும், தர்மத்தைத் தோற்றுவித்தவர்களும் அநாதியாகும், அதே போன்று தர்மத்தைக் காப்பவர்களும் பரப்புபவர்களும் அநாதியாகும். உதஸர்ப்பிணீ அவஸர்ப்பிணீ ஆகிய காலங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்குங்கால் இவை அனைத்தும் துவக்கத்தைக் கொண்டதாகும். ஜைன தருமத்தைத் தோற்றுவித்த பகவான் விருஷப தேவரும் ஆஹார தானமளித்தலைத் தோற்றுவித்த ஸ்ரேயாங் குமாரரும் அறமார்க்க வழிகாட்டிகளாவர். அதே போன்று ஜிநமார்க்கத்தைப் பிரசாரம் செய்பவர்களும், காப்பவர்களும் சாஸந தேவதைகளாவர். ஒவ்வொரு தீர்த்தங்கரருடைய காலத்திலும் யக்ஷ-யக்ஷிகள், நான்கு க்ஷேத்ரபாலகர் முதலானோர் முக்கியமானவர்கள். தகுதியுள்ள பெற்றோர்கள் மீது பாசங் கொண்ட, நல்லறிவு படைத்த மக்களைப் போன்று இந்த சாஸந தேவதைகளும் ஜிநதர்மத்தை ஒளிமயமாக்கி பிரபாவனை (பரவச்) செய்கின்றனர். பக்தர்களுக்குத் தோன்றும் இடையூறுகளைப் போக்கி பாதுகாக்கின்றனர், காலத்திற்கு ஏற்றவாறு தர்மாத்மாக்களைத் தோற்றுவிக்கின்றனர்.

சக்ரேஸ்வரி முதல் பத்மாவதி இறுதியாகிய தேவிமார்களும், கோமுகயக்ஷன் முதல் குஹ்ய யக்ஷன் இறுதியாக வுள்ள தேவர்களும், திக்பாலகர்களும் தீர்த்தங்கர பகவான்களுடைய திருவடிகளில் மிக்க பக்தியுடன் தொண்டு புரியும் நற்காட்சியாளர்களேயாவர். ஏனெனில் ஸமவசரணத்தில் தீக்காட்சியாளர்கள் செல்வதே இல்லை. இக் கருத்தைத் 'திலோய பண்ணத்தி' ஆசிரியர் கூறியுள்ளதாவது:—

மிச்சா இட்டீ அபவ்வோ தே ஸாஸஸண்ணி
ணஹொந்தி கட ஆயிம்,
தஹய அணைஜ்சவஸாயா ஸந்தித்தா விவிஹ
விவரீதா 732.

மித்யா திருஷ்டிகள் ஸமவசரணத்தில் செல்வதில்லை. சென்ருல் நற்காட்சியாளர்களாக மாறி விடுகிருர்கள் என்ற அடிப்படையில் சாஸந தேவதைகளும் ஸமவசரணத்தினுள் இருப்பதால் நற்காட்சியாளர்களே என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அவர்கள் பிறவியில் தீக்காட்சி யாளர்களாய் இருந்திருக்கலாம். ஆனுல் ஜிநேந்திர பகவா னுடைய சேவையை மேற் கொண்டதுமே தூய நற்காட்சி யாளர்களாகி விடுகின்றனர். பகவானுடைய சிலைகளும், ஜிநாலயங்களும் ஸமவசரணத்தின் அமைப்பைக் கொண் டவைகளேயாகும். எனவே ஜிநேந்திர பகவானுடைய பிம்பங்களின் (சிலை) அமைப்பை மஹாபுராண ஆசிரியரான ஜிநஸேநாசரியார் கூறியுள்ளதாவது:—

"வாமே ச யக்ஷீம் பிப்ராணம் தக்ஷிணே யக்ஷமுத்தமம்,
நவகிரஹா நதோபாகே மத்யே ச க்ஷேத்ரபாலகம். 8
யக்ஷாணாம் தேவதாநாம்ச ஸர்வாலங்காரபூஷிதம்,
ஸ்வவாஹநாவலோபேதம் குர்யாத் ஸர்வாங்க
சுந்தரம், 9.

பொருள் ;- ஜிநேந்திர பகவானுடைய இடதுபக்கம் யக்ஷியையும், வலது பக்கம் யக்ஷனையும், கீழே நவக்ருஹத் தையும், நடுவில் க்ஷேத்ர பாலகரயும் அமைத்து சிலையைச் செய்தல் வேண்டும். இத் தேவதைகள் பற்பல அலங்காரங் களுடன் தம்-தம் வாஹநங்களோடு சிறப்புடன் காட்சி யளித்தல் இன்றியமையாததாகும். ] உண்மையில் ஜிநராஜ ருடைய நெருங்கிய தொடர்பு கொண்ட சாஸந தேவதை கள் மரியாதைக்குரியவர்களே. நம்மைப் போன்று சமமான

கொள்கையைப் படைத்த ஸாசன தேவதைகளுக்கு ஆதரவு, ஸத்காரம், மரியாதை ஆகியவை அளித்தல் ஆகாதா? அவசியம் அளித்தல் வேண்டும்.

த்ரிலோக ஸாரத்தில் நேமிசந்திரஸித்
தாந்த சக்ரவர்த்தி அழகுபடக் கூறியுள்ளதாவது-

''ஸ்ரிதேவி ஸுதநதேவி ஸவ்வாண்ஹ ஸணக்-
குமார ஜக்காணம்,
ருவாணிய ஜிநபாஸே மங்கலமுட்ட விஹ
மஷி ஹோதி. 978.

பொருள் :- ஜிநேச்வரரின் சிலையில் ஸ்ரீதேவி, சுருத தேவி, ஸர்வாண்ணயக்ஷன், ஸநத்குமாரயக்ஷன் ஆகிய தேவதைகள் தம்-தம் நிலையில் இருத்தல் வேண்டும். அத்துடன் எட்டு மங்கல திரவியங்களும் இருக்க வேண்டும். இதிலிருந்து அறியக்கிடைப்பதாவது: ஜிநசாஸனத்தின் பெருமையை மனித இனத்தை விட ஜிநபக்தியுள்ள பவன வாசி தேவதைகளுக்கு அதிக பொறுப்பு உண்டு. சாஸந தேவதைகள் மனித இனத்தால் செய்ய இயலாத கடின செயலையும் குறுகிய காலத்தில் திறம்படச் செய்து முடிக்கும் வல்லமையுடையவர்கள். எனவே பரந்த மனப்பான்மைக் கொண்ட நற்காட்சியாளர்கள் தர்ம சம்பந்தப்பட்ட விதி-விதானங்களில் இச்சாஸந தேவதைகளுக்குச் சன்மானஞ் செய்து தம் அறச் செயல் இடையூறின்றி நடைபெற மிக்க அன்போடும், ஆதரவோடும் வரவேற்பு அளிக்கின்றனர். அவைகளுக்குரிய பொருட்களை தகுதிக்குத் தக்கவாறு அற்பணிக்கின்றனர். இது முறையற்ற செயலன்று. ஆகம முறைப்படி நடைபெறும் நற்செயலாகும். இவ் விஷயத்தைக் குறித்து ஆதிபுராண ஆசிரியரான ஜிநசேநாசாரியார் கூறியுள்ளதாவது ;-

''திக்பாலாச்ச யதா யோக்யம் திக்விதிக்பாகஸம்ச்ரிதா :
திஷ்டந்திஸமம் நிகாயை : ஜிநோத்ஸ்வ தித்ருக்ஷயா

தேவ ஜகத்ராயீ நேத்ர வ்யந்தராத்யாச்ச தேவதா:,
ஸமம் பூ ஜாவிதாநேஷு பச்யன் தூரம் வ்ரஜேதது;,
நாத்சாஸநாதி ரக்ஷார்த்தம் கல்பிதா; பரமாகமே,
அதோ யக்ஞம் ச தாநேந மாநநீயா; ஸுத்ருஷ்டிபி;

ஜிநபகவானுடைய விழாக் காலங்களில் காட்சியைக் காணும் நோக்கத்துடன் வருகைத் தந்துள்ள திக்பாலகர் முதலானோர் தம்-தம் ஊழிய தேவதைகளுடன் தமக்குள்ள திக்குகளில் தங்கி சேவைச் செய்கின்றனர். இக் கருத்தின் படி விசேஷ உற்சவங்களிலும், விதி விதாநங்களிலும், பிரதிஷ்டை முதலிய பஞ்ச கல்யாண காலங்களிலும் எல்லா சாஸந தேவதைகளை வரவேற்று' அவரவர்களுக்குத் தகுந்த இடங்களில் முறைப்படி ஸ்தாபித்தல் வேண்டும். அந்த சாஸந தேவதைகள் ஜைன ஆகம நூல்களில் ஜிநசாஸனைதைக் காப்பவர்கள் என ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர். ஆகவே நற்காட்சியாளர்கள் அத் தேவதைகளுக்கு வஸ்த்ரம், ஆபரணம், நைவேத்யம் முதலிய யக்ஞம்சப் பொருட்களை அர்ப்பணித்து ஆதரவையும் கௌரவத்தையும் அளித்தல் வேண்டும்.

இரவிஷேணு சாரியரால் இயற்றப்பட்ட பத்ம புராணத்தில் முனிஸுவிரத பகவானுடைய ஜன்மாபிஷேக காலத்தில் இந்திரன் வேண்டிக் கொள்வதாவது;

''தத: சக்ரேண திக்பாலா: லோகபாலா யதாக்ரமம்,
ஸம் ஸ்தாப்ய பூஜிதா அர்க்யை:
ஸர்வசாந்திகஹேதவே.

பொருள் :- அப்பொழுது இந்திரன் திக்பாலகர்கள், லோகபாலகர்கள் சர்வசாந்தியை உண்டாக்கும் பொருட்டு தகுந்த இடத்தில் அமரச் செய்து அர்கியம் முதலியவற்றை அர்ப்பணித்து, கௌரவித்தார்.

ஸாத்யகி என்ற முனிவரர் தம் குருவிடம் அனுமதி பெற்று சாஸந தேவதைகளிடம் அறைக் கூவியவராகி சொற்போர் நடை பெறுமிடத்தில் அமர்ந்து தியானத்தில் ஆழ்ந்திருந்தார். அச்சமயம் அச்சாஸந தேவதைகள் பலி அரசன் முதலிய நான்கு அமைச்சர்களின் அகம் பாவத்தை அடக்கி யொடுக்கி ஜிநதர்மத்தின் பெருமையைப்பரப்பினர்.

கீழே கூறப்படும் நிகழ்ச்சி அனைவரும் நன்கு அறிந்துள்ளதாகும். அதாவது :- ஆன்மதத்வ வாதியும் க்ஷாயிக ஸம்யக்திருஷ்டியும் ஆன குந்த குந்தாசாரியார் ஊர்ஜயந்த கிரியில் சுவேதாம்பரர்களோடு வாத-விவாதம் (சொற்போர்) நடத்தினர். அப்போது கூஷ்மாண்டியின் (தர்ம தேவி) உதவியை நாடினர். திகம்பரர்களின் இரதம் முன்னால் செல்ல வேண்டுமென்றும், சுவே தாம்பரர்களின் இரதம் பின்னால் செல்ல வேண்டுமென்றும் கற்சிலையின் வாயிலாகச் சொல்ல வைத்து திகம்பர ஜைன தர்மத்திற்குப் புகழ் படைத்தார். இதனால் குந்த குந்தருடைய ஆத்ம சாதனையிலோ, அல்லது நற்காட்சியிலோ எவ்விதமாகும் ஏற்படவில்லை. நற்காட்சிக்குத் தீங்கு ஏற்படக் கூடிய எத்தகைய செயலையும் அவர் ஒரு போதும் செய்ய மாட்டார்.

மற்றொரு நிகழ்ச்சியாவது;- குந்த குந்தர் தமிழகத்தின் ஸ்வர்ணகிரியில் நால்வகை சங்கத்துடன் தங்கி தவ ஒழுக்கத்தில் ஈடுபட்டிருந்தார். அச்சமயம் அவருடைய சிஷ்யையான ஆர்யிகையை கொடிய துர் தேவதையொன்று பிடித்துக் கொண்டு ஆட்டிப் படைத்தது. அந் நிலையைக் கண்டு சங்கத் தலைவரான குந்த-குந்த அடிகளார் ஜ்வாலா மாலினி தேவியின் மந்திர சாதனையால் ஆரிகையின் சங்கடத்தைப் போக்கினர். இது சங்கத்தைச் சார்ந்தவர்களுக்கு சங்கத் தலைவர் செய்த சாதனையாகும்.

வாதத்தில் (சொற் போரில்) ஒப்பற்ற வல்லுனரான ஆசாரிய அகளங்க அடிகளார் பௌத்தர்களுடன் ஆறு மாதம் சொற் போர் புரிந்தார். ஆனால் ஜைனத்திற்கு

வெற்றி கிட்டவில்லை, அச்சமயம் பௌத்தர்களின் இரகசியத்தை அறிய முடியாமல் திணறினர். அதுகாறும் ஜைன அறத்தைக் காப்பாற்றும் நிமித்தம் சாஸந தேவியான தர்மதேவியின் உதவியை நாடினர். நற்காட்சி நிறைந்த தர்மதேவி கனவில் தோன்றி கூறியதாவது:- தாங்களுடன் திரை மறைவில் சொற்போர் புரிவது மண் குடத்தில் ஆவாஸம் செய்து வைத்துள்ள 'தாராதேவி' ஆகும். நாளை காலை சொற்போரில் கேட்ட கேள்வியைத் திரும்பவும் கேட்கவும்; பதில் கிடைக்காது. உடனே திரையினுள் சென்று 'குடத்தைக் காலால் உதைத்து உடைத்து விடவும். சொற்போர் முடிவுற்று ஜைன அறத்திற்கு வெற்றி கிட்டும். பின்னர் இடையூறு விளைந்தால் நான் பார்த்துக் கொள்ள கிறேன்,

அறத் தலைவரான அகளங்க தேவரின்-தூக்கம் கலைந்தது பஞ்ச நமஸ்காரத்தை ஜபித்த வண்ணம் எழுந்து அமர்ந்தார். அவரது மனம் மகிழ்ச்சியால் நிறைந்திருந்தது, நம்பிக்கை ஒளி பிரகாசித்தது. வெற்றி ஒலி காதில் ஒலிப்பது போல் தோன்றிற்று. கடவுள் வணக்கம் முதலிய காலைக் கடமையை முடித்துக் கொண்டு சிங்க நடையுடன் வாத மேடைக்குச் சென்றார். எப்போதும் போல் திரை விடப்பட்டு தொங்கிக் கொண்டிருந்தது. சொற்போர் தொடங்கிற்று. வினா எழுப்பினர்: பதில் கிடைத்து. நன்கு விளங்கவில்லை; திரும்பவும் விடையளிக்கவும் என்றார். வார்த்தை வெளி வரவில்லை; அடங்கி விட்டது. வாதப் போரும் முடிவுற்றது. நாற்புறமும் ஜைனத் திருவறத்திற்கு வெற்றி-வெற்றி என்ற மகிழ்ச்சி ஒலி முழங்கிற்று. வெற்றி வாகைச் சூடிய அகளங்க தேவர் உடனே திரையை விலக்கி விட்டு உள்ளே சென்று காலால் குடத்தை எட்டி உதைத்து உடைத்தெறிந்தார். அதில் வாசஞ் செய்துக் கொண்டிருந்த தாராதேவி ஓட ஆரம்பித்தது. அச் சமயம் தர்மதேவி-தாராதேவியைப் பிடித்து பயமுறுத்தி பௌத்தர்களின் இரகசியத்தை வெளியிட வைத்தது. தாராதேவி பயத்தால்

நடுங்கியவாறு பௌத்தர்களின் அனைத்து தீச்செயலையும் வெளியிட்டது. பௌத்தர்கள் தோல்வி கண்டனர். இன்று வரை தருமத் தலைவரான அகளங்க தேவர் நிலை நாட்டிய வெற்றி ஒலி, ஒலித்துக் கொண்டே இருக்கிறது. அவ்வெற்றியின் பெருமையாலன்றோ நாம் அனைவரும் ஜைனர்களாக வாழ்கிறோம். நற்காட்சி கொண்ட சாஸநதேவியான தர்ம தேவியின் அருளால் அன்றோ! அன்று வெற்றிக் கொடி பட்டொளி வீசிப்பறந்தது. அத்தகைய தேவதைக்கு அகளங்க தேவர் போன்ற பேரறிவு படைத்த தர்க்கச் செம்மலால், நல்லறத்திற்கு வெற்றி வாங்கித் தந்தமைக்காக நன்றி செலுத்தாமலிருக்க முடியுமா? ஸன்மானம் செய்யாமலும், மதிப்பு அளிக்காமலும் இருக்க இயலுமா? முடியவேமுடியாது.

மற்று மொரு நிகழ்ச்சி-பேரறிவு படைத்த குந்த குந்தரை 'பத்ம நந்தீ' என்ற பெயரால் புகழ் படச் செய்ததும் சாஸந தேவதையேயாம். பொறுமையின் காரணமாக மந்திரவாதிகளான சுவே தாம்பர சாதுக்கள் ஆசாரிய அடிகளாரின் கமண்டலத்தில் மாயையால் மீன்களை உண்டாக்கி அரச அவையில் திகம்பர ஜைன தருமத்திற்கு அவமானத்தை உண்டு பண்ண தீய முயற்சியில் ஈடுபட்டனர். அச்சமயம் ஆசாரிய அடிகளார் ஜிநசாஸன பாதுகாவலரான சாஸன தேவதையின் உதவியைக் கொண்டு மீன்களைத் தாமரைகளாக்கி அரச அவையில் கொட்டிக் குவித்தார். ஜைன அறத்திற்கும் பெருமையை உண்டாக்கினார். அதன் காரணமாகவே அடிகளாருக்குப் பத்ம நந்தீ (தாமரை மலரோன்) என்ற பெயர் புகழ் படைத்ததாயிற்று.

ஆசாரிய குந்த குந்த அடிகளார் ஜைன சாஸனத்தில் ஆழ்ந்த பற்றுள்ள பத்மாவதி தேவியின் உதவியால் கம்பத்தில் பார்சுவ பிரபுவின் பிம்பத்தைக் காட்சியளிக்கச் செய்தார். பகவான் பார்சுவ நாதர் மீது தோத்திரத்தை இயற்றினார். கல்யாண மந்திரம் என்ற நூலை இயற்றியதுமே

அதன் சக்தி வெளியாயிற்று. பகவான் தம் சக்தியை வெளியிட வந்தாரா? இல்லவே இல்லை. அவரைச் செய்பவராகவும், பற்றுள்ளவராகவும் ஆக்குதல் அரஹந்த பகவானுக்குச் செய்யும் அவர்ணவாதம் என்ற குற்றமாகும். அதனுல் தீயகதிக்கு ஆளாக நேரும். அங்ஙனமாகில் இத்தகைய சக்தியைக் காண்பித்தது யார்? ஜைன அறத்திற்குப் பெருமையைத் தேடித் தரும் சாஸநதேவதையான பத்மாவதியேயாம் என்பதில் ஐயம் கொள்ளத் தேவை இல்லை. அது நம்மைப் போன்று விருப்பு-வெறுப்பு கொண்ட சக்தி வாய்ந்த அறப் பற்றுடைய மற்றும் நற்காட்சி பெற்ற தேவதையாகும்.

'ரவி விரதம்' என்ற கதையில் புத்தசேனருடைய பெற்ரோர் பகவான் பார்சுவ நாதரையும், அவருடைய ஊழிய தேவதைகளான தரணேந்திரக்ஷ-பத்மாவதியக்ஷியையும் ஆராதித்து (வழிபட்டு) வந்தனர். அதன் பயனாக பத்மாவதி தேவி தோன்றி அவர்களின் துன்பத்தையும். வறுமையையும் போக்கி இன்பத்தை உண்டாக்கிஞள், அக்கதையின் விவரமாவது புத்தசேனன் என்பவன் பசி பட்டினியுடன் புல் எடுக்கச் சென்ருன். பசியோடிருந்ததால் மண் வெட்டியை மறந்து வந்து விட்டான். அவன் அண்ணி கோபங் கொண்டு உடனே சென்று எடுத்து வருமாறு கட்டளை இட்டாள். பாவம் அச்சிறுவன் பசியோடும், பட்டினியோடும் துன்பப்பட்டவாறு தள்ளாடிக் கொண்டே காட்டிற்குச் சென்ருன். அங்கு மண் வெட்டியில் நாகம் சுற்றிக் கொண்டிருப்பதைக் கண்டான். பயத்தாலும் துன்பத்தாலும் நிறைந்திருந்த அவன் தேம்பித்-தேம்பி அழலாஞன். அச்சமயம் பகவத் பக்தியும், வெகுளியும் கொண்டவனை அவன் சாஸநதேவதைகளை உதவுமாறு வேண்டிஞன். அப்பொழுது ஜிநபக்தியில் நி றை ந் த பத்மாவதி தேவி தோன்றி பக்தனுக்கு அழகிய இரத்தினங்கள் பதிக்கப்பட்டிருந்த சுவர்ணத்தாலான மண் வெட்டியை அளிக்க முன் வந்தது. ஜிநர்மீது பக்தியும், நேர்மையும்

கொண்டிருந்த அச்சிறுவன் 'இது என்னுடைய தன்று' என ஏற்க மறுத்து விட்டான். பின்னர் வெள்ளியாலானதைக் காண்பித்தது. அதையும் ஏற்க இசையவில்லை. இறுதியில் அவனுடைய நேர்மையை மெச்சி இரும்பு மண் வெட்டியுடன் பொன், வெள்ளி மண் வெட்டிகளையும் பரிசாக அளித்தது. ஜிநதேவர் மீது அசைக்க முடியாத பக்தியைக் கொண்டிருந்த காரணத்தால் துன்பமும், வறுமையும் தொலைந்தது. திருவறத்திற்குப் பெருமையும் புகழும் கிடைத்தது.

ஸ்ரீபாலர் சரித்திரத்தில் அழகிய கதை யொன்று காணக் கிடைக்கிறது. தவள சிரேஷ்டிஇரயன மஞ்சூஷை (ஸ்ரீபாலர் மனைவியின்) மீது காதல் கொண்டான். ஸ்ரீபாலரை வஞ்சனையால் கடலில் தள்ளி விட்டான். பிறர் மனைவிப் பேயனும், காமுகனும், தீயோனுமான தவளன் பத்தினித் தெய்வமான இரயன மஞ்சூஷையிடம் வந்தான். காமக் கண்கொண்ட அத் தீயோனின் சொற்களைக் கேட்ட அப்பதிவிரதை பொறுத்துக் கொள்ள முடியாத வேதனைகளை அடக்கிக் கொண்டு தைரியத்துடன் தவளனுக்குப் புத்திமதிகளைக் கூறியதுடன் வெறுத்தும் விரட்டினுள். கடுமையாகக் கண்டிக்கப்பட்டும் அத்தீயோன் தன் தீய எண்ணத்தை விடவில்லை. பின்னர் திக்கற்றப் பெண் தானே எனப் பலாத் காரம் செய்ய முற்பட்டான். அச்சமயம் தலை சிறந்த பத்தினித் தெய்வமான அப்பெண்மணி நீதி வழங்கும் சாஸந தேவதைகளே நீங்களும் தூங்கி விட்டீர்களா? எங்கே இருக்கிறீர்கள்? விரைந்து வாருங்கள். திக்கற்ற என்னைப் பலமும், பாதுகாப்பும் அற்றவளாகக் கருதி, இப் பாவியானவன் துராசாரச் செயலைச் செய்யத் துடிக்கிருன் என் கற்பை விலை பேசுகிருன். பொன்ஞன என் கற்பு காப்பாற்றப்படா விட்டால் இக் கடலே எனக்குக் கதி. இக் கடலில் குதித்து உயிரை விட்டாவது என் கற்பைக் காப்பாற்றுவேன். இது உறுதி எனக் கூறி அழுதாள். அக் கருணை நிறைந்த அழுகையைக் கேட்ட சாஸந தேவதைகள்—

சம்பமாணாஸநா பஹவோ ஜிநசாஸநதேவதா :
ஆஜக்முர் சீலரக்ஷாயை பஹவோவ்யந்தராமரா :

பொருள் :- சாஸந தேவதைகளின் ஆஸனங்கள் அசைந்தாடின. அவர்கள் தம் அவதி ஞானத்தால் அனைத்தையும் அறிந்து கற்புக்கரசியின் கற்பைக் காக்க ஓடோடி வந்தனர். அவர்கள் ஒழுக்கங்கெட்ட தவளனைக் கடுமையாக தண்டித்தனர். அவன் கதறி அழுது உயிர் பிச்சை வேண்டினன். இத்தகைய கொடிய நிலையைக் கண்ட அவன் மெய்க் காப்பாளர்களும் ஓடி மறைந்தனர். அச்சமயம் இரயன மஞ்சூஷை சாஸந தேவதைகளிடம், காலில் விழுந்து உயிருக்கு மன்றும் இத்தவள சேட்டை மன்னித்து உயிர் பிச்சை அளியுங்கள் என வேண்டினள். சாஸந தேவதைகள் தவள சேட்டை பயமுறுத்தி கற்புக்கரசியிடம் மன்னிப்புக் கோரச் செய்தன. இரயன மஞ்சூஷையும் சேட்டை தைரியப்படுத்தி, அவரைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றாள். இவ்வாறு இருவர்களுக்கும் தகுந்த ஏற்பாடுகளைச் செய்து முடித்ததுடன் ஜைன அறத்தையும், கற்பையும் காப்பாற்றி சிறந்த பெருமையை உண்டாக்கி விட்டு அத் தேவதைகள் சென்று விட்டன.

இதைப் போன்று ஜைன நூல்களில் பற்பல மேற்கோள்கள் நிரம்ப உள்ளன. சோமா என்ற கற்புக்கரசியின் கற்பின் மகிமையால் சர்பம் மாலையாக மாறுதலும், மனோரமையின் சீலாசார பரீக்ஷையில் கால் பெரு விரல் பட்டதுமே வஜ்ர கதவுகள் திறந்து கொண்டதும், அனந்த மதி வேடர்களிடமிருந்து காப்பாற்றப்பட்டதும் இவைகள் அனைத்தும் யார் செய்த செயலாகும்? சாஸந தேவதைகளின் செயலேயாம். மேலும் சுதர்சன சேட்டுக்குக் கிடைத்த தூக்கு தண்டனையைப் போக்கி சிம்மாஸநம் அளித்தது யார்? வாள் வீச்சைப் பூமாலையாக்கியது யார்? இதுவும் சாஸந தேவதைகளின் பெருமை மிக்கச் செயலேயாகும். இவ்வாறு நம் நூல்களில் பற்பல இடங்களில் சாஸந

தேவதைகளின் மகிமை பாராட்டி விளக்கிக் கூறப்பட்டுள்ளது நோக்கத் தக்கது. மேலே கூறப்பட்ட விளக்கங்களிலிருந்து ஜிநசாஸன தேவதைகள் நற்காட்சியுடையவர்கள், ஜிநசாஸந பக்தர்கள், ஜைன தர்ம பற்றுடையவர்கள், பரோபகாரிகள், அறத்தைப் பரப்புபவர்கள், காப்பவர்கள், அறப் பெரு மக்களின் துன்பத்தைத் துடைப்பவர்கள் என்பது தெட்டென விளங்குகின்றதல்லவா? அத்தகைய அறவோர்களுக்கு ஆதரவு அளிப்பதும், ஸன்மானம் அளிப்பதும், தக்க மதிப்பளிப்பதும் ஒவ்வொரு திருவறப் பற்றுடைய நற்காட்சியாளர்களின் ஒப்பற்றக் கடமை என்பதை சொல்லவும் வேண்டுமோ!

தற்சமயம் சிலர் நற்சீலர்களான சாஸந தேவதைகளை வழி படுவதில் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர் எதிர்ப்பாளர்களும் சாஸந தேவதைகளின் வலிமையையும், அறப் பற்றுடையோருக்குத் தோன்றும் ஆபத்தில் ஆதரவளிக்கும் திறனையும் மனதார ஏற்கின்றனர். ஆனல் அவர்களை வழி படுவதும், சத்காரம் செய்வதும் தீது எனக் கூறுகின்றனர். ஆனல் இதை நன்கு ஆராய்தல் வேண்டும்.

சாஸன தேவதைகள் கருணை, பரோபகாரம், அறப் பற்று, அறத்தைப் பரப்புதல், அறத்தைக் காத்தல் ஆகியவைகளைச் செய்பவர்கள் என்பது தெட்டென விளங்குகின்றது. இத்தகைய நற்பண்புகள் நற்காட்சி இல்லாமல் எங்ஙனம் இருக்கக் கூடும்? அதாவது இருக்க இயலாது. நமக்கு உதவியளிப்பவர்கள், அறத்தைக் காப்பவர்கள் ஆகிய நற்பண்பாளர்களுக்கு அவமானத்தையும், அவமரியதையையும் செய்வது பெரியோர்களின் செயலாகுமா? இதுதான் நமக்கு வியப்பை அளிக்கிறது. அவர்கள் மீது பொருமையையும், வெறுப்பையும் காட்டுவது தீக்காட்சியாளர்களின் செயலாகும். நமது பரம ஆகமம் ஒவ்வொரு பிராணிகளின் மீதும் அன்பையும், நட்பையும் காட்ட வேண்டுமெனப் பணிக்கிறது. விரோதிகள் மீதும் வெறுப்பைக் காட்டாமல்

நடு நிலைமையாக இருக்க வேண்டுமென்பது ஜிநரின் கட்டளை யாகும். ஒவ்வொரு ஜீவனையும் காத்தலே அந்த ஜினருக்குச் செய்யும் மரியாதையாகும். அவ்வாறிருக்கையில் இடைவிடாது ஜிநாகமம், ஜிநதர்மம், ஜிநமார்க்கம், ஜிநதர்மத்தைச் சார்ந்தவர்களுக்குத் தொண்டு, உதவி, பாதுகாப்பு ஆகியவைகளில் ஈடுபடும் சாஸந தேவதைகள் மரியாதைக் குரியவர்கள் அல்லர் என்பதை எங்ஙனம் ஏற்க இயலும்? அதாவது:- அவர்கள் மரியாதைக்குரியவர்களே என்பது கருத்து. அவர்கள் ஜிநாலயத்தில் தகுந்த இடத்தில் அமர்த்தத் தகுதியுடையவர்களே! நற்காட்சியாளர்களால் பணியத் தகுதியுடையவர்களே! இவர்களைப் பணிவதால் நற்காட்சி மாசு படாமல் பெருமைப்படுகிறது. ஏனெனில் நற்காட்சியாளர்களின் சங்கடத்தில் உதவி, அவர்களை அச்சமின்றி இருக்க உற்சாக மளிக்கின்றனர்.

மாபெரும் ஆசாரியரான சமந்த பத்திரரைப் பாராட்டி வழி படுபவர்கள் உணர வேண்டியதாவது:- தீக்காட்சியுடைய தேவீ-தேவதைகள், பைரவி, சாமுண்டி, கருமாரி போன்றவைகளை வணங்குதல் தீக்காட்சியாகுமென அதே ஆசாரியர் கூறி இருக்கிறுர். ஸம்யக் திருஷ்டி சாஸநதேவி தேவதைகளை வணங்குவது, பூஜிப்பது, பாராட்டுவது தீக்காட்சியாகாதெனக் கூறியுள்ளார். ஆம், ஜிநேந்திர பகவானுக்குச் செய்வது போன்று பக்தி, பூஜை முதலியவைகளைச் செய்தல் ஆகாதெனக் கூறியுள்ளார். (கூறப்பட்டுள்ளது) ஜிநேந்திர பகவானுக்குச் சமமாக சாசன தேவதைகளை மதிப்பதும், பூஜிப்பதும் தீக்காட்சியாகும். அத்துடன் இத் தேவதைகளின் தகுதியை மறைப்பவர்களும் அத்தகையோர்களே (தீக்காட்சியாளர்களே). சாஸந தேவதைகள் நான்காம் குணஸ்தானவர்த்தியான ஸராக (பற்றுள்ள) நற்காட்சியாளராவர். சாரித்ரமோஹனீய (ஒழுக்கக் கேட்டு வினைகள்) ராக, த்வேஷங்களை விடாதவர்கள். இவர்கள் புகழ், பூஜை முதலியவற்றை விரும்புபவர்களாயினும் நற்காட்சியாளர்களே! எனவே, இவர்களுக்குச் செய்யும்

பூஜையும், விதி விதானங்களும் பற்றேடு கூடியவைகளே. குடும்பத்திலுள்ளவர்கள் இத்தகைய பூஜைகளைச் செய்தல் வேண்டும். பூஜை என்ற சொல்லைக் கேட்டதும் திடுக்கிட வேண்டாம். இங்கு பூஜை என்பதின் பொருள் தகுதிக் கேற்ப ஸன்மானம் செய்தலேயாம். இச் சாஸந தேவதை களின் பூஜை விதியில் ஒவ்வொருவர்களின் தகுதிக்கேற்ப வஸ்திரம், ஆபரணம், இனிப்புப் பொருள்கள் அலங்கார வஸ்துக்கள் மங்கல பொருட்கள் ஆகியவை இடம் பெரு கின்றன. இப் பொருட்கள் ஜிநபகவானின் பூஜை பொருட் களினின்றும் வேறுபட்டவைகளாகும். இவர்களைப் பூஜிக்கும் காலமும் தனிப்பட்டதாகும்.

ஒவ்வொரு சிராவக சிராவகிகளும் முதலில் ஜிநேந்திர பகவானுக்கு பஞ்சாம்ருதாபிஷேகமும், எட்டு திரவியங் களால் அர்ச்சனையும் செய்தல் வேண்டும். அதன் பின்னர் சாஸன தேவதைகளின் தகுதிக்கேற்ப, விதி முறைப்படி பூஜை செய்தல் வேண்டும். விசேஷகாலங்களில் செய்யப் படும் சிறப்புப் பூஜைகளில் முதலில் சாஸந தேவதைகளுக்கு இடமளிக்கப்படுகின்றது. இதன் பொருளாவது:- ஆரம் பிக்கப்படும் விதி விதானங்கள் எவ்வித இடையூறுமின்றி நடைபெற வேண்டுமென்பதேயாகும். இது ஜிநாகமத்திற்கு ஏற்றதே; எதிரானதல்ல. ஏனெனில் மாபெரும் ஆசாரியர் களால் எழுதப்பட்ட பிரதிஷ்டை நூல்களில் இவ்வாறு வர்ணிக்கப்பட்டுள்ளது.

சிலர் கூறுவதாவது :- சாஸந தேவதைகளுக்குச் சன் மானம் செய்யலாம். ஆனல் அபிஷேகம் செய்தல் ஆகாது என்பதாகும். அத்தகையோர்களுக்கு இறுதி சுருத கேவலி யான பத்ரபாகு சுவாமியினல் இயற்றப்பட்ட "பத்ரபாகு ஸம்ஹிதா" நூல் போதுமான எடுத்துக் காட்டாகும். அதில் கூறியுள்ளதாவது:-

"சப்த நிமித்தம் பூர்வம் ஸ்நாத்வா நிமித்தத:
சுசிவாஸ: விசுத்ததீ:
அம்பிகா பிரதிமாம் சுத்தாம் ஸ்நாபயித்வா ரஸாதிகை :
(158)

அர்சித்வா சந்தநை: புஷ்பை: கடுவேதவஸ்த்ர ஸம்வேஷ்டிதாம்
ப்ரக்ஷிப்ய வாமகக்ஷயாம் க்ரஹித்வா புருஷஸ்தத: (159)

பொருள் -- சப்தத்திற்கு நிமித்த காரணத்தை வர்ணிக்கும் போது ஆசாரியர் விளக்குவதாவது:- சப்தங்கள் (ஒலிகள்) தெய்விகம், ப்ராக்ருதிகம் என இரண்டு வகைப்படும். இங்கு தெய்வீக சம்பந்தமான சப்தத்தைப் பற்றிய விளக்கமாகும். சாதிப்பவனும், பூஜிப்பவனும் முதலில் ஸ்நாநம் செய்து தூய உடை உடுத்த வேண்டும். பின்னர் தர்மதேவி சிலைக்கு முறைப்படி கோ (பசு) ரசமாகிய பால், நெய், தயிர் ஆகியவைகளால் அபிஷேகம் செய்ய வேண்டும். அச் சிலைக்கு தூய வெண் உடை உடுத்த வேண்டும். சந்தனம், புஷ்யம், நைவேத்யம் முதலியவைகளால் அதற்குப் பூஜை செய்ய வேண்டும். மற்றும் இடது பக்கத்தில் ஸ்தாபித்து சப்தத்தின் நிமித்தத்தை அறிவதற்கு முயல வேண்டும்.

இதிலிருந்து நன்றாக விளங்குவதாவது :- தேவையின்படி விசேஷகார்யங்களில் இதற்கு (சாஸன தேவதைக்கு) அபிஷேகம், பூஜை முதலியவை செய்ய வேண்டியது அவஸ்யமாகும். இதனால் ஜைன சாஸநத்தினுடைய பெருமையானது அதிகரிக்கிறது. ஜைனர்களுக்கு உற்சாகமும் வளர்ச்சியடைகிறது. நாம் நம் கொள்கையில் நிலைத்து நிற்பதற்கு இவை (சாஸந தேவதைகள்) உதவுகின்றன

தற்சமயம் அறியாமையால் ஆணவங் கொண்டவர்கள் அறப்பற்றுடைய சாஸநதேவதைகளை ஒதுக்கி விட விரும்புகின்றனர். மேலும் அவமதிக்கின்றனர்; தாழ்மை படுத்துகின்றனர். இச் செயல் எளிய மக்களை ஏமாற்றுவதாவகும். இவர்களைப் பூஜிப்பதால் நற்காட்சியில் சற்று குறைப்பாடு ஏற்பட்டாலும், தீக்காட்சி உண்டாவதற்குக் காரணமில்லை. கிழவியின் கையிலிருக்கும் ஊன்று கோல் முதுமையின் காரணத்தால் ஆடினாலும், அவளைக் கீழே விழாமற் பாது

காக்கின்றது. கை, காலே முறிய விடவில்லேயோ! இச் செயல் அது போன்றதேயாம். ஆம், தூய ஆத்ம சித்தியைப் பெற பிறர் உதவி தேவையில்லே. அது ஆன்மா-ஆன்மாவினுல் ஆன்மாவினிடத்தில் இன்புறும் போது பெற இயலும்! ஆனுல் லௌகீக காரியசித்திக்காக இவர்களின் உதவி பெறுவது குற்றமாகாது. அதாவது தன் விருப்பம் பூர்த்தி யடைவதற்கும், நற்காட்சி கெடாமலிருக்கவும் இவைகளுக்கு ஸன்மானம் செய்தல் இன்றியமையாததாகும் இவைகளே அவமானஞ் செய்தல் நன்றி கெட்டச் செயலாகும். எனவே, ஜிந ஆகமத்திற்கு அனுகூலமான சாஸன தேவதைகளுக்கு ஜைனத்தில் உயர்ந்த இடமுண்டு என்பதில் ஐயம் கொள் வதற்கில்லே. இவ் விஷயத்தில் உம்புஜம் பத்மாவதிதேவி யினுடைய மகிமை அனேவரும் அறிந்ததே. இங்கு இதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் விரத விதான கதை யொன்று நினேவு படுத்தப்படுகின்றது.

இதன் பெயர் :- 'ஸம்பத் சுக்ரவார விரத விதான கதை' என்பதாகும்.

மகதம் என்ற நாட்டில் இராஜமாபுரம் என்ெருரு நகர முண்டு. அதன் மன்னன் சிரேணிகன், இராணி சேலினி அந்நகரின் விபுலாசலமலேயில் பகவான் மகாவீரருடைய சமவஸரணம் வருகைத் தந்தது. அரசனும், அரசியும் பகவானேத் தரிசிக்கச் சென்றனர். இருவரும் பகவானே பக்தியுடன் மூவலம் வந்து வணங்கிய பின் பூஜையையும் செய்தனர். பின்னர் மனிதர்களுக்கென அமைந்துள்ள கோஷ்டத்தில் (இடம்) அமர்ந்தனர். சிரேணிக மன்னர் வீரபிரபுவினிடம் பணிவுடன் கேட்டதாவது:- பிரபுவே, உலக வாழ்க்கையில் தம்பதிகள் (கணவன்-மனேவியர்) பெருஞ்செல்வச் சிறப்புப் பெற யாது செய்தல் வேண்டும்? என்ற கேள்விக்கு பதிலிறுத்திய பகவான், கௌதம கண தரரின் வாயிலாக கீழ்க் கண்டவாறு விளக்கினுர்.

பண்டைய காலத்தில் ஸௌராஷ்டிர மென்ற நாட்டில் பாரி பத்ரபுரீ என்ற அழகிய நகர முண்டு. அதில் விக்ரமாப்

தன் என்ற அரசன் ஆட்சி செலுத்தி வந்தான். அவன் நீதிமான், தர்மாத்மா. மற்றும் மக்கள் மீது பற்று கொண்டவன். அவனுக்குப் பல மனைவிமார்கள் இருந்தனர். அவர்களுள் பூமிபுஜாதேவி என்பவள் பட்டத்தரசியாவாள். அவள் உத்தமி, அறப்பற்றுடையவள், நுண்ணிய செயல் திறன் படைத்தவள். இருவரும் தம் அரசாட்சியில் நிரம்ப ஜைன அறத்தைப் பரப்பினர். அரசி, அமைச்சனைப் போன்று அரசரின் வேலைகளில் உதவியளித்து வந்தாள். அதே நகரில் 'ச்ருணயாதன்' என்ற ஏழை வணிகனொருவனிருந்தான். அவன் மனைவியின் பெயர் ருக்மாவதி. அவளுக்கு ஜைன அறத்தின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது. அவள் பாவத்திற்கு அஞ்சினாள். நாம் நாளும் செய்ய வேண்டிய ஆறு வகையான கடமைகளைத் தவறாது செய்து வந்தாள். ஆனால் அவள் வறுமையால் வாடிக் கொண்டிருந்தாள். அதன் காரணமாக நாணத்தால் மற்றவர்களிடம் செல்லவோ, உரையாடவோ, தொடர்பு கொள்ளவோ விரும்பவில்லை. தன் வீட்டில் உள்ளதைக் கொண்டு திருப்தியடைந்து வந்தாள். நிறைந்த மக்கள் செல்வத்தைப் பாதுகாப்பதிலேயே அவள் காலம் கழிந்து வந்தது. தம் மக்களின் விருப்பத்தைப் பூர்த்திச் செய்ய முடியாததால் கவலைக் கொண்டிருந்தாள். இக் கவலையின் காரணத்தால் அவள் உடல் மெலிந்து வந்தது. என்ன செய்வேன்? யாரிடம் செல்வேன்? எவ்வாறு என் துன்பம் விலகும்? என்ற வினாக்கள் இரவும் பகலும் அவள் முன் நிழலாடின,

ஒரு நாள் அண்டை வீட்டுக்காரி வந்தாள். அவள் கூறியதாவது:- தங்கையே, இன்று மகிழ்ச்சி கொள்ளத் தக்க நன்நாள் நம் நகரின் பூங்காவில் 'விஜயாபிநந்தனர்' என்ற மாமுனிவர் வருகைத் தந்திருக்கிறார். அவர் பேரறிஞர், மிக்க தியானீ, சிறந்த தவத்தார். அவருடைய அறவுரையைக் கேட்க நகர மக்கள் அனைவரும் செல்கின்றனர். நானும் செல்கிறேன். நீயும் என்னுடன் வருவாயாக! அத்

தூயோரின் தரிசனத்தால் எண்ணற்ற வினைகள் விலகி விடும். தீயவை ஒழியும்; நல்லவை வந்தடையும், அறப் பாலைக் குடிப்பதால் மனக்களிப்பு ஏற்படும். அத்துறவி தூயவர். பற்றற்றவர். பிறர் நலம் கருதும் பண்பாளர். அவருடைய அறவுரையைக் கேட்டு இரு பிறவியின் பயனைப் பெறலாம். அதற்காகவே நான் உன்னை அழைக்க வந்துள்ளேன். நற்கதியைப் பெறுவதற்குக் காரணமான முனி ராஜரின் தரிசனத்தைப் பெற விருப்பமிருக்குமாயின் என்னுடன் புறப்படு என்றாள். இதைக் கேட்டதும் ருக்மாவதிக்குப் பேரானந்தம் உண்டாயிற்று. கவலையால் வருந்திய மனத்தில் அமைதி ஏற்பட்டது. சிறிது நேரமாவது குடும்பத் தொல்லையிலிருந்து விடுதலைப் பெறலாம் என்ற எண்ணத்துடன் பயணமானாள்.

முனிராஜரிடம் சென்றதும் அங்கே மக்கள் கூட்டம் நிரம்பி இருப்பதைக் கண்டாள். தவத் துறவிக்கு வெற்றி (முனிராஜருக்கு ஜே) என நாலா பக்கத்திலும் எழும் ஒலியையும் கேட்டாள். அம் முனிவர் பெருமானின் பெருமையை யுணர்ந்தாள். விமானங்களிலிருந்து வானவர்கள் பூமாரி பொழிவதைக் கண்டு அவளுக்குப் பெரு மகிழ்ச்சி ஏற்பட்டது. அவள் தூய தவத் துறவியின் திருவடிகளில் விழுந்து வணங்கினாள். அப்பெருமானின் ஆசி பெற்று மாதர்களின் இருக்கையில் அமர்ந்தாள். அடிகளார் அறவுரையாற்றத் துவங்கினார். அப் பெருமகனார் தம் தரும அமிர்த மழையில் ஏழு தத்துவங்கள், ஒன்பது பதார்த்தங்கள், ஐந்து அஸ்திகாயங்கள், ஆகியவைகளின் ஸ்வரூபங்களையும், சிறப்பையும் உள்ளம் நெகிழ (நனைய) எளிய முறையில் விளக்கினார். இல்லறத்தார், துறவறத்தார்களின் கடமைகளை உணர்த்தினார். ஸம்ஸாரத்தின் சுக துக்கங்களை எடுத்துக் காட்டினார். இவைகளை கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த ருக்மாவதி தன் வீடு, மக்கள், வறுமை அனைத்தையும் மறந்து அளவற்ற மகிழ்ச்சியில் திளைத்திருந்தாள். அச்சமயம் முனிராஜர் உலகில் போக-சுகங்களைப் பெறும் வழியையும் எடுத்து விளக்கினார், மக்

களுக்கு நற்பாதையைக் காட்டினுர், அம் மகான் கேடற்ற செல்வச் சிறப்பை வாரி வழங்கும் 'ஸம்பத் சுக்ரவார விரத'த்தின் விதி முறையை விளக்கமாக எடுத்துக் கூறினுர். அம் முறையை ருக்மாவதி கவனமாகக் கேட்டாள்.

அம்முறையாவது :- ஆவணி மாதத்தில் வரும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் உபவாஸமோ அல்லது ஏக புக்தமோ (ஒரே வேளை உண்ணல்) இருத்தல் வேண்டும். சக்திக்குத் தக்கவாறு பூஜை பொருட்களை எடுத்துக் கொண்டு ஜிநாலயத்திற்குச் செல்ல வேண்டும். அங்கு ஜிநேந்திர பகவானுடைய தரிசனம், ஸ்துதி, ஸ்தோத்திரம், பூஜை முதலியவைகளை முடித்துக் கொண்டு ஸ்ரீ 1008 பகவான் பார்ச்வ நாதரையும் அவருடைய யக்ஷ-யக்ஷிகளான தரணேந்திர பத்மாவதியையும் அமர்த்தி பஞ்சாம்ருதாபிஷேகம் செய்தல் வேண்டும் பின்னர் பத்மாவதியை ஒரு உயர்ந்த ஸ்தானத்தில் ஸ்தாபிக்க வேண்டும். அம்பாளை பலவித அலங்காரங்களால் அலங்கரித்தல் வேண்டும். பூமாலைகள், தோரணங்கள், விளக்குகள், வாழை மரங்கள் முதலியவற்றுல் மண்டபத்தை அலங்கரித்தல் வேண்டும். மஞ்சள், குங்குமம், ஊரவைத்த கடலை முதலியவற்றைக் கொண்டு பஞ்சோபசார பூஜை செய்தல் வேண்டும். அடுத்து ஸ்ரீபத்மாவதி மஹாதேவிக்கு மணி மங்கல கயிறை அணிவிக்கவும்; மேலும் பல ஆபரணங்களை அணிவிக்கவும்; இரண்டு மாவிளக்கு, தூபம், பழம், தர்பை முதலியவைகளுடன் அர்க்யம் எடுத்துக் கொண்டு ஐபமாலை சொல்லியவாறு மூவலம் வந்து பூர்ணார்க்யம் அளிக்கவும். பின்னர் மகாதேவி பத்மாவதிக்கு மங்கல ஆரதி செய்யவும்! பக்தியுடன் சாந்தி விஸர்ஜ்ஜனம் செய்யவும்! ஸம்பத் சுக்ரவார கதை கேட்கவும்; ஸ்ரீபத்மாவதி தேவி ஸஹரஸ் நாமத்தின் ஒவ்வொரு பீஜாக்ஷர மந்த்ரங்களைச் சொல்லி குங்குமம், லவங்கம், புஷ்பம் அர்ச்சிக்கவும்; ஒவ்வொரு நூறிலும் அர்க்யம் செய்யவும்; கந்தோதகம் தெளித்துக் கொள்ளவும் ஓம் ஆம் க்ரோம் ஹ்ரீம் ஐம் க்லீம் ஹ்லௌம் ஸ்ரீபத்மாவதி

தேவ்யை நம: மம ஸர்வ விக்நோப சாந்திம் குரு குரு ஸ்வாஹா.

இம் மந்த்ரத்தை பூக்களால் 108 முறைச் சொல்லி மூன்று காலங்களிலும் (காலை, நடுப்பகல், மாலை) ஜபிக்கவும்; ஒருக்கால் பூ கிடைக்கா விட்டால் ஜாதி, ரோஜா, பூக்களால் ஜபிக்கவும், இறுதி வெள்ளிக்கிழமையன்று மேற் கூறிய எல்லா கிரியை (செய்ய வேண்டியவை)களையும் முடித்து விட்டு ஸ்ரீபத்மாவதி அம்மனுக்குச் சேலை அணிவிக்கவும், 16 வகை அலங்காரங்களைச் செய்யவும். கீழே குறிப்பிட்டுள்ள பொருள்களை ஐந்து மாங்கல்ய ஸ்திரீகளுக்கு மடியில் நிரப்பி தானம் கொடுக்கவும். அவைகளாவன:- ஐந்து வளையல்கள், ஐந்து மஞ்சள், ஐந்து கொப்பரை, ஐந்து குங்கும டப்பா, ஐந்து எலுமிச்சம் பழம், 5 வாழைப் பழம், கர்ஜூர்காய், 5 பத்தாசுகள், தேங்காய், ஜாக்கெட், கோதுமை, அரிசி முதலியவைகளாகும். தானம் கொடுக்கும் போது கீழ்க்கண்ட மந்த்ரத்தைக் கூறவும் :-

"ஜய ஸ்படிக் ரூபத பாமிநீ, ஸ்ரீபத்மாவதி அசஹாரிணீ
தரணேந்திர ராஜகுலரக்ஷிணீ,
தீர்க்காயுராரோக்யரக்ஷிணீ,"

பின்னர் தன் குடும்ப மக்களுக்கு ஊர வைத்த கடலை, குங்குமம், மஞ்சள், வெத்திலை, பாக்கு வெல்லம் கொப்பரை ஆகியவைகளை மடிதானமெனக் கூறி தான மளிக்கவும். அச்சமயம் அங்கு கூடியுள்ள மாங்கல்ய ஸ்திரீகளின் நெற்றியில் மஞ்சள், குங்குமம் இடவும். அடுத்து ஜய ஜயவெனக் கூறியவாறு மங்கல பாடல்கள் பாடிக் கொண்டும், மேள தாளங்களுடனும் வீட்டிற்கு வர வேண்டும். இதே போன்று ஐந்து ஆண்டுகள் செய்ய வேண்டும்.

உத்யாபன விதி முறை:- ஐந்து கோண கும்பங்களையும், ஐந்து கலசங்களையும் ஸ்தாபித்தல் வேண்டும்,

ஐந்து நிறபட்டு நூல்களைக் கட்டி ஐந்து கோணங்களைத் தயாரிக்கவும். நாலு மூலைகளிலும் வாழை மரம், தோரணங்கள் கட்டவும் கம்பங்களுக்கருகில் வளைவுகளை அமைத்து ஒளி விளக்கேற்றவும், பூமாலை முதலியவைகளால் மண்டபத்தை நன்கு அலங்கரிக்கவும், மாவிளக்கு ஆரதிஎடுக்கவும் சாமரை வீசவும், மஞ்சள் அரிசியைக் கொண்டும், பூக்களைக் கொண்டும் பொழியவும், ஸ்ரீபத்மாவதி தேவி விதானஞ் செய்யவும், ஐந்து வகை நைவேத்யம் செய்யவும், ஸ்ரீதேவ சாஸ்திர குரு மற்றும் பத்மாவதி தேவியின் முன்னிலையில் மாங்கல்ய ஸ்த்ரீகளுக்கு தொன்னையில் பூக்கள், அதன் மீது குங்குமம். முத்து வைத்து தானங் கொடுக்கவும், அம்மனுக்கும் சமர்ப்பிக்கவும, ஐந்தைந்து மங்கல திரவியங்களை ஜிநாலயத்திற்கு தானம் அளிக்கவும், ஆர்யாங்கனைகளுக்கு வஸ்திரதானமும், ஆஹாரதானமும் அளிக்கவும், ஐந்து தம்பதியர் (புருஷன்-மனைவியர்)களுக்கு உணவு அளிக்கவும். இம்முறைப்படி உத்யாபனம் செய்ய இயலாவிடில் நோன்மை இரட்டிப்பாக நோற்கவும், இவ்விரதத்தின் சிறப்பாவது எல்லா வசதிகளும் நிறைந்த குடும்பம் அமைவதும், நல்ல சந்ததிகளால் சுகமுண்டாதலும் எவ்வித குறையுமின்றி வாழ்க்கை நடத்துதலும், தரும விருத்தியும் ஆரோக்யமும், பூத-பிசாசுகளின் தொல்லை இல்லாதிருத்தலும், இருப்பின் ஒழிதலும், புகழ் வளரவும் காரணமாகின்றது. ஜிநதர்மத்தில் ஆழ்ந்த பற்றிருக்க வேண்டும். வாழ் நாள் முழுதும் ஸ்ரீபத்மாவதி தேவிக்கு தொண்டு செய்தல் வேண்டும், இவ்விரதத்தின் மகிமையால் எல்லா நன்மைகளும் விளைகின்றன. தர்ம தியானத்தின் காரணத்தால் மோக்ஷ பரம்பரை எளிதாகக் கிடைக்கின்றது

பெண்களுக்கு இளமையில் 'ஆத்ம குங்குமம் (மஞ்சள்) பருவ காலத்திலும், திருமணமான பின்னரும் 'ஸம்பத் குங்குமம்' (குங்குமம்) கண்டிப்பாக தீயகதியைப் போக்க வல்லதாகும், மாதர்கள் இவ்விரதத்தை அவசியம் ஏற்று நடத்துதல் வேண்டும், திடமனதோடு காப்பாற்ற வேண்

டும். நற்குலத்தோர்களே இதை ஏற்று போற்ற இயலும். எனவே ஒவ்வொரு பெண்டிரும் சுகம், நன்மை, ஆன்ம நலம் இவைகளின் வளர்ச்சிக்காக இவ்விரதத்தை அவசியம் செய்தல் வேண்டும்.

இவ்வாறு முனிவர் பெருமானின் திருவாக்கால் விரதத்தின் ஸ்வரூபத்தையும், உத்யாபனையையும், அதன் பெருமையையும் சொல்லக் கேட்டு ருக்மாவதி ச்ருத்தை, பக்தி ஊக்கம் ஆகியவைகளுடன் இவ்விரதத்தை ஏற்றாள். முனிராஜரும், அவள் வேண்டுகோளுக்கிணங்க பஞ்ச பரமேஷ்டி சாக்ஷியாக அவ்விரதத்தைக் கொடுத்தார். குருவினிடம் விரதம் ஏற்றுக் கொண்ட ருக்மாவதி மகிழ்ச்சியுடன் தன் வீடு வந்து சேர்ந்தாள் சக்திக்குத் தக்கவாறு பொருள்களைச் சேகரித்துக் கொண்டு நோன்பை நோற்கலானாள்.

அதே நகரில் ருக்மாவதியின் தம்பி வசித்து வந்தான். அவன் பெரும் பணக்காரன். ஆனால் சகோதரியிடம் பாசமில்லாதவன் அவன் ஒரு நாள் தன் மகனுக்கு யக்ஞோபவீதஸம்ஸ்காரம் (பூணூல் கல்யாணம்) செய்தான். அதற்காக ஏழு நாட்கள் நகரவாசிகளுக்கு உணவளிக்க விரும்பி ஒவ்வொரு வீட்டிற்கும் விருந்திற்கு வருகைத் தருமாறு அழைப்பு விடுத்தான் ஆனால், ஏழை எனக் கருதி தன் தங்கைக்கு அழைப்பு அனுப்பவில்லை. நகர மக்கள் உணவு அருந்திய பின் அவள் வீட்டு வழியாக மகிழ்ச்சியுடன் சென்று கொண்டிருந்தனர் தன் தம்பி தன் மக்களைக் கூட அழைக்கவில்லையே என எண்ணி வருத்த முற்றாள். இருவரும் ஒரே தாயின் வயிற்றில் பிறந்திருந்தும கவனியாது இத்தகைய அவமதிப்பைச் செய்துள்ளான். வியப்பாக இருக்கிறது. நான் அவனுக்கு எந்த தீங்கையும செய்யவில்லை. ஒருகால் வேலையின் அதிகத்தால் மறந்திருக்கலாம். என் தம்பி தானே! அழைக்கா விட்டாலென்ன? நாமே போகலாம் என்று எண்ணியவாறு குழந்தைகளை அழைத்துக் கொண்டு சென்று பந்தியில் உட்கார்ந்து உணவு

அருந்தலானாள். சிறிது நேரத்தில் அவள் தம்பி வந்தான் தன் சகோதரி குழந்தைகளுடன் உணவு உண்பதைக் கண்டு கடுங்கோபங்கொண்டான். நீ ஏன் இங்கு வந்தாய்? அழைப்பில்லாமல் வர உனக்கு வெட்கமாகயில்லையா! உனக்குக் கட்டத் துணி உண்டா? அல்லது நகை தானிருக்கிறதா? உன் தரித்திர அவஸ்தையைக் கண்டுதான் நான் உனக்கு அழைப்பு அனுப்பவில்லை. உன் நிலையைக் கண்டு மக்கள் என்னை என்ன எண்ணுவார்கள்? போகட்டும்! இன்று வந்து தொலைத்து விட்டாய். நாளை இப்பக்கம் தலை காட்டாதே! புரிந்ததா? என்று கடிந்து கூறினான். பாவம், வெட்கத்தோடு தலை குனிந்தவாறு எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தாள் மனமில்லாமல் உண்டு விட்டு மக்களை அழைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தாள். மறுநாள் குழந்தைகள் மாமாவின் வீட்டிற்குச் சென்று உணவருந்த அடம் பிடித்தனர். அவள் கண் முன் தம்பியின் கொடிய காட்சி நிழலாடியது. திட்டியும் விரட்டியும் கேளாது குழந்தைகள் தொந்தரவு கொடுத்தன. நம் தம்பி ஏதோ சொல்லி விட்டான்! அதற்காக ஏன் வருந்த வேண்டும்? நம்மையும் வறுமை வாட்டுகின்றது. நம் மக்களுக்கு நல்ல உணவு கிடைக்கின்றது. நமக்கும் ஒரு நாள் பொழுது போகிறது. எனவே இதையெல்லாம் பார்த்தால் முடியாது என மனத்தை சமாதானப்படுத்திக் கொண்டு குழந்தைகளோடு சென்று பந்தியில் உணவருந்த அமர்ந்தாள். உண்ண ஆரம்பித்ததும் படுபாவியான தம்பி பார்த்து விட்டான். தமக்கையைக் கண்டதும் அவனுக்கு அளவில்லாத கோபம் வந்து விட்டது. தன் சகோதரியை நோக்கி, நீ சரியான பிச்சைக்காரியாக இருக்கிறாய்! நேற்று நான், நீ வரக் கூடாதெனத் தடுத்தும் மானமில்லாமல் படையோடு இன்றும் வந்து சேர்ந்து விட்டாய், போகட்டும், தின்று விட்டுப் போய்த் தொலை. நாளைக் கட்டாயம் வரக் கூடாது. நினைவிருக்கட்டும் என எச்சரித்து விட்டுச் சென்று விட்டான். பாவம் அவள், தன் ஏழ்மையின் நிலை அத்தகையதென எண்ணி வருந்தியவாறு வீடு வந்து சேர்ந்தாள்,

என்ன செய்வாள்! அடுத்த நாளும் அதே நிலை! அவள் தம்பி அவளைப் பார்த்ததும் கோபத்தின் எல்லையைத் தாண்டி அவளைப் பரபர வென்று இழுத்து வந்து ஏசாதெல்லாம் ஏசி வெளியே துறத்தி விட்டான். தன் வறுமையையும் அவ மானத்தையும் நினைத்து தேம்பித் தேம்பி அழலானாள். ஏதெய்வமே! எந்த பாவத்தின் உதயத்தால் நான் இத் தகைய துன்பத்தை அனுபவிக்கிறேன் இந்த வறுமையில் வாடி துன்பப்படுவதை விட செத்து மடிவதே மேல், நரக துன்பத்தை விட இது கொடியது. என்ன செய்வேன்? எங்கே செல்வேன்? என் கஷ்டத்தை யாரிடம் சொல்வேன்? இதென்ன வாழ்க்கை? என வருந்தியவளாகி, ஏதேவி! பத்மாவதி தாயே, என் வேண்டுகோளைக் கேளம்மா, நீயும் என் கஷ்டத்தைக் கண்டு வருந்தவில்லையா? உனக்கும் என் மீதும் கருணை பிறக்கவில்லையா? அம்மா தாயே நீதானம்மா எனக்குத் துணை, என்னையும் என் மக்களையும் காப்பாற் றம்மா! பக்தர்கள் மீது கருணைக் காட்டி கரை ஏற்றம்மா! வேறுகதியில்லை எனப் பலவாறு தெய்வத்தை வேண்டி கதறியழுதாள் அழுதவாறே தூங்கியும் விட்டாள். அவளது கருணை நிறைந்த கதறலைக் கேட்டு மகாதேவி பத்மாவதியால் பேசாமலிருக்க முடியவில்லை அத்தேவி முகுடம், குண்டலம், இரத்தின ஹாரம் முதலியவைகளை அணிந்து கொண்டு, கையில் தர்ம சக்ரம் ஏந்தி, ஒளி வீசும் அலங்காரத்துடன் கனவில் தோன்றியது. மேலும் கூறிய தாவது:- அம்மா, வருந்தாதே: உனக்கு இனி எவ்வித துன்பமுமில்லை. நீ, ஸம்சத் சுக்ரவார மென்ற நோன்பை நோற்கிறாயல்லவா? அதைச் சீராக நடத்து. அதன் மகிமை யால் உனக்கு எல்லா இன்னல்களும் விலகி விடும். வறுமை பறந்தோடி விடும். செல்வம் தேடி வரும். தைரியத்தைக் கடை பிடி. ஜிநபகவான் மீது வற்றாத பக்தியைக் கொள். அவரை தியானம் செய். அதனால் உனக்கு நன்மை பயக்கும். அவரைச் சரணமடைந்து விடு கரையேறி விடுவாய் எனக் கூறி மறைந்து விட்டது. ருக்மாவதியின் தூக்கம் கலைந்தது. இங்கு மங்கும் பார்த்தாள், எவரும் காணவில்லை, தன்

உள்ளத்தில் எண்ணலானுள்-தேவியின் மகிமையே மகிமை! வந்த சுவடு தெரியாமல் மறைந்து விட்டதே. என்ன செய்வ தென்றே விளங்கவில்லையே! எனப் பலவாறு எண்ணி ஜிநாலயத்திற்குச் சென்றுள். அங்கு கடவுளை வணங்கிய பின் பத்மாவதி தேவியின் முன் சென்று அமைதியாக தியான நிலையில் உட்கார்ந்து கொண்டாள். அச்சமயம் பத்மாவதி தேவி சிரித்துக் கொண்டே அவள் முன் காட்சி தந்தது. தேவியின் மலர்ந்த முகத்தைக் கண்டு ருக்மாவதி கைகளைக் கூப்பி வேண்டலானுள்.

ஏதேவி, தாயே, நான் உன்னைச் சரண மடைந்துள் ளேன். என்னைக் கை விடாதே! காப்பாற்றம்மா! என்னை நல்ல பாதையில் அழைத்துச் செல். உன் மகளாகிய நான் திக்கற்று தவிக்கிறேன். இவ்வுலகில் உன்னைத் தவிர என்னைக் காப்பாற்ற வேறு யாருமே இல்லை! அண்ணன் தம்பி எனக் கூறி நான் எங்கே செல்வேன்? எல்லோரும் என்னை வெறுக் கிறுர்கள். எனவே, நான் துன்பம் துடைக்கும் உன்னை என் மனத்தில் ஏற்றுக் கொண்டு விட்டேன். இனி எனக்கு எவ்வித பயமுமில்லை. என நீண்ட நேரம் வேண்டுகோளில் அமர்ந்திருந்தாள். பின்னர் அவளுக்கு தன் மக்கள் பசியால் வாடிக் கொண்டிருப்பார்கள் என்ற எண்ணம் தோன்றவே, நமஸ்காரம் செய்து விட்டு வீட்டை நோக்கி நடக்கலானுள்,

வீட்டிற்கு அருகிற் சென்றதும் ஒட்டை வீட்டில் என்ன காண்கிறுள்? அதற்கு பதில் மாபெரும் மாளிகை நிற்கிறது. பலவித இரத்தினங்கள் உள்ளே நிறைந்து கிடக்கின்றன, குழந்தைகள் காமன் மக்களோடு அலங்காரத்துடன் விளை யாடிக் கொண்டிருக்கின்றனர். தன-தான்யங்கள் நிரம்பி வழிகின்றன, வீட்டில் இலக்குமிதாண்டவமாடுகின்றுள். ஆவணி மாத நதி பிரவாகம் போல் திடீர் வளர்ச்சி காணப் படுகிறது. நாலா பக்கத்தினும் தேவையான பொருட்கள் குவிந்து கிடக்கின்றன. ஒரே மகிழ்ச்சி, சிறிது நேரத்திற்குள் இம்மகிமையின் புகழ் நாலா பக்கங்களிலும் பரவியது.

உண்ண உணவின்றிருந்த இடத்தில் பஞ்ச பக்ஷண பாயாசங்கள் தட்டில் பறிமாறப்பட்டிருந்தன. வீடு செல்வங்களால் நிரம்பி வழிந்தது. மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து செல்வச் செழிப்பைக் கண்டு வியப்பால் மலைத்து நின்றனர். ருக்மாவதியின் தம்பிக்கும் இச்செய்தி விரைவில் எட்டியது அவனுக்கு பெருத்த ஏமாற்றமும் வியப்பும் ஏற்பட்டது. சகோதரியை விருந்துக்கு அழைக்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. உடனே தமக்கையின் வீட்டிற்கு வந்தான். பணிவுடன் தன் சகோதரியை நோக்கி, அன்பிற்கினிய உடன் பிறப்பே, தயவு செய்து தவறை மறந்து குடும்பத்துடன் உணவருந்த வாருங்கள், எக்காரணத்தைக் கொண்டும் மறுக்கலாகாது, நீங்கள் வராவிட்டால் நானும் உண்ண மாட்டேன். பட்டினியோடிருப்பேன் என்றான். அதைக் கேட்டதும் ருக்மாவதிக்கு வியப்பு ஏற்பட்டது. நேற்று அழையாமலே சென்று பந்தியில் உட்கார்ந்து உண்டுக் கொண்டிருந்த நம்மை பர-பரவென இழுத்து வந்து வெளியில் தள்ளியவன், வேசி, பிச்சைக்காரி என ஏசியவன், இன்று வருந்தி-வருந்தி அழைக்கும் காரணமென்ன? நேற்று வரை வறுமையின் எல்லையில் வாடி வதங்கிக் கொண்டிருந்தோம். இன்று செல்வச் செழிப்பில் மிதந்து கொண்டிருக்கிறோம் செல்வம் படைத்தவன் செல்வத்திற்கு மதிப்பு கொடுக்கிறான். பந்த பாசத்திற்கு அன்று. போகட்டும் நாமும் செல்வச் செருக்கில் அவனை மதியாதிருப்பது ஏற்றதன்று. என மனத்தைத் தேற்றிக் கொண்டு உயர்ந்த உடையும், சிறந்த நகைகளும் பூண்டு சகோதரன் வீட்டிற்குச் சென்றாள். அவன் சகோதரியைக் கண்டதும் ஓடோடி வந்து வரவேற்றான்; தூய நீரால் கால் கழுவினான்; உயர்ந்த ஆசனம் அளித்து அமரச் செய்தான். அக்காளும் தம்பியும் உண்ண அருகருகே அமர்ந்தனர். வெள்ளித் தட்டில் வித விதமான இனிப்புப் பொருட்கள் பறிமாறப்பட்டிருந்தன. சகோதரி தன் விலையுயர்ந்த போர்வையை எடுத்து பலகையின் மீது வைத்தாள். அடுத்து அணிந்திருந்த அணிகலங்களைக் கழற்றி வைத்தாள். லட்டு, ஜிலேபி முதலிய இனிய

உணவுப் பொருள்களை எடுத்து அணிகலங்களுக்கும் உடைகளுக்கும் பறிமாறினாள். இதைக் கண்ட சகோதரன் என்ன செய்கிறாய்? என வினவினான். நான் சரியாகத்தான் செய்கிறேன். நீ எதை விருந்துக்கு அழைத்தாயோ, அதற்கு விருந்தளிக்கிறேன். இதில் தவறேதுமில்லை என்றாள். சகோதரன் தான் செய்த தவறை உணர்ந்து கொண்டான். வெட்கத்தால் தலை குனிந்தான். பின்னர் தான் செய்த தவறை மன்னிக்குமாறும், உணவு உண்ணுமாறும் வேண்டினான். அதற்கு அவன் சகோதரி, இன்று எனக்கு விருந்து கிடையாது; என் லக்ஷ்மி (செல்வம்) க்குத்தான் விருந்து நான் அழையா வீட்டிற்குள் மானமில்லாமல் நுழைந்து ஏச்சும் பேச்சும் கேட்டு, வறுமையின் கொடுமையோடு சாப்பிட்டு விட்டேன், இன்று நான் சாப்பிட வேண்டியதில்லை என் செல்வங்களாகிய லக்ஷ்மி சாப்பிடட்டும் என அவன் செய்த கொடுமையைக் குத்திக் காட்டிக் கூறினாள், அதைக் கேட்டதும் அவனுடைய உடலும் உள்ளமும் அவமானத்தால் குன்றின. தன் தமக்கையை, அறிவில்லாமலும், ஆணவத்தோடும் செய்த குற்றத்தை மன்னிக்குமாறும், பழையதை முற்றிலும் மறந்து விடுமாறும் காலைப் பிடித்து மன்றாடி வேண்டினான். தமக்கையின் மனமும் இளகியது. கோபத்தைத் தவிர்த்து இருவரும் நெருங்கி அமர்ந்து உணவு உண்ணலாயினர். ஸ்ரீபத்மாவதிதேவியின் அருளால் வைபவம் கிடைத்ததால் அனைவரும் அத்தேவியின் பக்தியிலும் பூஜையிலும் ஈடுபடலாயினர். ருக்மாவதியும் தன் செல்வச் செழிப்பைப் பெரிதும் நற்காரியத்திற்கே பயன் படுத்தினாள். மாபெரும் ஜிநாலயங்களைக் கட்டுதல், பழைய ஆலயங்களைச் சீர்திருத்துதல், நான்கு வகையான ஜைன சங்கங்களுக்கு ஆஹாரதானம் அளித்தல், தீர்த்த க்ஷேத்ர வந்தனைகளைச் செய்தல், விருதமிருத்தல், உத்யாபனைச் செய்தல், ஆகிய நற்காரியங்களை இடைவிடாது செய்து வந்தாள். அதிசயத்தோடு கூடிய பெரும் புண்யத்தைத் திரட்டினாள். இம்மஹிமையைக் கண்டு அவ்விடத்திய அரசன் ஜைன தருமத்தைப் பின் பற்றி மிக்க ஆடம்பரத்

துடன் இப்பேரறத்திற்குப் பிரபாவனைச் (பரப்புதல்) செய்தான். இவ்வாறு தர்ம புருஷார்த்தின் பயனால் பொருள், போகம் இரண்டையும் பெற்று, இறுதியில் ருக்மாவதியும், குடும்பத்தாரும், இராஜாவும் ஜிநதீக்ஷையை ஏற்றனர். அயராது தவஞ்செய்து மோக்ஷத்தையும் பெற்றனர்; இப்பெருமைகள் அனைத்தும் ஜிநசாஸந தேவதைகளை வழிபட்டதால் கிடைத்த நற்பயனாகும்,

எனவே ஒவ்வொரு சிராவக-சிராவகிகளும் பகுத்தறிவுடன் தன் கடமையைச் செய்ய முற்படுதல் வேண்டும் தத்துவக் கருத்துக்களை ஆராய்ந்தறிந்து நடந்தால் எல்லா காரியங்களும் வெற்றி பெறுகின்றன.

卐 卐 卐

卐 卐

நூல்கிடைக்குமிடம் :-

J. B. TRAERS

No. 11. Vinayaka St,

Madras-79

மல்லிநாத்ஜெயின் சாஸ்திரி,

'சாஸ்திரிபவன்'

23, பெருமாள் கோயில் தெரு,

சென்னை-15.